சார்பு நீதிமன்றம், குளித்தலை.
முன்னிலை – திரு.எம்.சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, குளித்தலை.
2024–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11–ஆம் தேதி வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.394/2023**

(CNR No.TNKR080009532023)

கனரா பேங்க் குளித்தலை கிளை சார்பாக
அதன் கிளை மேலாளர் . . . . வாதி

**/எதிர்/**

1) A.பூஜா
2) A.சத்யா . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 06.12.2023–ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஷேக் அன்வர்தீன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**ஒருதலைபட்ச தீர்ப்புரை**

வாதி வங்கி தரப்பில், தாவா தொகை ரூ.**1,97,427/–**ம், அதற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை வருடத்திற்கு **10.10%** பின்வட்டி மற்றும் வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செலுத்தக் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்** :–

1ம் பிரதிவாதியின் கல்வி கடனுக்கு 2ம் பிரதிவாதி பொறுப்புறுதியாளராக இருக்க ஒப்புக்கொண்டு வாதி வங்கியிடம் கல்வி கடன் கேட்டு 30.11.2016ம் தேதியில் கடன் விண்ணப்பம் கொடுத்ததாகவும், அவ்விண்ணப்பத்தின் பேரில் வாதி வங்கியானது ரூ.1,68,000/– வரை கடன் வழங்க 30.11.2026ம் தேதி கடன் எண்.346651000206–ல் வாதி வங்கி அனுமதி வழங்கியது என்றும்,

பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு தாவா கடன்கள் பாக்கியை செலுத்த வேண்டியுள்ளதில் தங்களது பொறுப்படைவை ஒப்புக்கொண்டு 10.11.2019, மற்றும் 05.11.2022 ஆகிய தேதிகளில் கடன் உயிர்பிப்பு கடிதங்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், வாதி வங்கி பராமரித்து வரும் கடன் கணக்கு விபரப்படி பிரதிவாதிகள் 21.04.2023 ம் தேதியன்று ரூ.1,97,427/–ம், அதற்கு 10.10 சதவிகிதம் பின் வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், பிரதிவாதிகள் ஒப்புக்கொண்ட அடிப்படையில் மேற்படி கடனை வாதி வங்கி பலமுறை திரும்ப செலுத்த கோரியும் பிரதிவாதிகள் கடனை திரும்ப செலுத்தவில்லை என்றும், எனவே தாவா தொகையை பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிடக்கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பு வழக்கு சாட்சியம் மற்றும் ஆவணங்களின் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது. இந்த வழக்கில் வாதி வங்கியின் உதவி மேலாளர் சக்திமுருகன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணம் எதுவும் முன்னிடப்படவில்லை.

3) இந்த வழக்கில் சாட்சியம் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கை மறுத்துக் கூற வேண்டிய நிலையில் உள்ள பிரதிவாதி இந்த வழக்கில் ஆஜராகாததால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் வாதி தரப்பு வழக்கு வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே

இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.**1,97,427**–மும், (ரூபாய் ஒரு இலட்சத்தி தொன்னூற்று ஏழாயிரத்து நானூற்று இருபத்தி ஏழு மட்டும்) மற்றும் அதில் அசல் தொகை ரூ.**1,68,000/–**க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி அறுபத்தி எட்டாயிரம் மட்டும்) தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை வருடத்திற்கு **6%** பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**

__**வாதி தரப்பு சாட்சியம்**__ :–

வா.சா.1 – சக்திமுருகன் (வாதி வங்கியின் உதவி மேலாளர்)

__**வாதி தரப்பு சான்றாவணங்கள்**__ :–

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | கடன் விண்ணப்பம் அசல் |
| வா.சா.ஆ.2 | அனுமதி கடிதம் அசல் |
| வா.சா.ஆ.3 | கடன் ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.4 | உறுதிமொழி அபிடவிட் அசல் |
| வா.சா.ஆ.5 | கோரிக்கை கடிதம் அசல் |
| வா.சா.ஆ.6 | பல்கலைகழக சான்று அசல் |
| வா.சா.ஆ.7 | உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.8 | உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.9 | கணக்குப்பட்டியல் உண்மை நகல் |

**<u>பிரதிவாதிகள்  தரப்பு  சாட்சியம் மற்றும் சான்றாவணம்</u>** :– இல்லை.

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**சார்பு நீதிபதி,**

**குளித்தலை.**

* * * * * * * * * * * * * * * * * *

<u>சார்பு நீதிமன்றம், குளித்தலை.</u>

<u>அசல் வழக்கு எண்.394/2023</u>

நாள்.11.01.2024

வரைவு / செவ்வை தீர்ப்புரை
* * * * * * * * * * * * * * * * * *